


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.01.2025) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 8 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் விழுப்புரம் மாவட்டம் – வி.மருதூர் மற்றும் இராமநதபுரம் மாவட்டம் – பட்டணம்காத்தான் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள், விடுதிக்கட்டடங்கள் மற்றும் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் என மொத்தம் 27 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலான கட்டடங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் (மு.கூ.பொ.) முனைவர் அதுல் ஆனந்த், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ. வீர ராகவ ராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.1.2025) தலைமைச் செயலகத்தில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் சந்தித்து, ஃபெஞ்சல் புயல் நிவாரணப் பணிக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தனது ஒரு மாத சம்பளத் தொகைக்கான காசோலையை வழங்கினார்.

### சிறந்த தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் 10 பேருக்கு முதல்வர் வீடு ஒதுக்கீடு :

# அண்ணல் அம்பேத்கர் நூல்கள் : மக்கள் பதிப்பாக 10 தொகுதிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஜன.14-**

**கனவு இல்லத் திட்டத்தின் நீட்சியாக தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான சாகித்திய அகாதமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்ற 10 மொழி பெயர்ப்பாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடு ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கி, அண்ணல் அம்பேத்கரின் ஆக்கங்களை எளிய தமிழில் மொழிபெயர்த்து மக்கள் பதிப்பாக முதல் 10 தொகுதிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கனவு இல்லத் திட்டத்தின் நீட்சியாக தமிழில் சிறந்த மொழி பெயர்ப்பு நூலுக்கான சாகித்திய அகாதமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்ற 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடு ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆம் பிறந்த நாளை முன்னிட்டு 3.6.2021 அன்று தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட கனவு இல்லம் திட்டத்தின் நீட்சியாக தமிழில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான சாகித்திய அகாதமி மொழிபெயர்ப்பாளர் விருது பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விருதாளர்களுக்கு அரசு மூலமாக ரூ.40,00,000/ மதிப்பீட்டில் கனவு இல்லம் வழங்கப்படும் என ஆணையிடப்பட்டது.

அதன்படி, 1994ஆம் ஆண்டு மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "விஷக் கன்னி" எனும் நூலிற்காக மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற ஆ. செல்வராசு (எ) குறிஞ்சிவேலன் அவர்களுக்கு தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத் திட்டப் பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 2பி குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு கன்னடத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "பருவம்" எனும் நூலிற்காக மொழி பெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற ப. பாஸ்கரன் (எ) பாவண்ணன் அவர்களுக்கு தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத் திட்டப் பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் 3பி குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "செங்கோல் இல்லாமல் கிரீடம் இல்லாமல்" எனும் நூலிற்காக மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற சா. மணி (எ) நிர்மாலயா அவர்களுக்கு கோயம்புத்தூர், சிங்கா நல்லூரில் இரண்டாவது அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடத்தின் முதல் தளத்தில் 4ஆம் எண் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு ஒடியாவிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "பறவைகள் ஒருவேளை தூங்கிப் போயிருக்கலாம்" எனும் நூலிற்காக மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற

பி.க.இராஜேந்திரன் (எ) இந்திரன் அவர்களுக்கு சோழிங்கநல்லூர் 1500 திட்டப்பகுதி - II, எட்டாவது தளத்தில் உள்ள மத்திய வருவாய் பிரிவு - II எண்.1/47 குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு தெலுங்கிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "மீட்சி" எனும் நூலிற்காக மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற திருமதி கௌரி கிருபானந்தன் அவர்களுக்கு சோழிங்கநல்லூர் 1500 திட்டப்பகுதி, பிளாக் எண்11, எண் 32 குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "பொறுப்புமிக்க மனிதர்கள்" எனும் நூலிற்காக மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற க. பூரணச்சந்திரன் அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சென்னை, பெசன்ட்நகர் கோட்டம்/பிரிவு - 2, சோழிங்கநல்லூர் (1500 எம்.எஸ்.பி) இரண்டாவது தளம், பிளாக் எண் 7, அடுக்குமாடி குடியிருப்பில் எண். 11 குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "கசாக்கின் இதிகாசம்" எனும் நூலிற்காக மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற தி. மாரிமுத்து (எ) யூமா வாசுகி அவர்களுக்கு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத் திட்டப் பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் '4சி' குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "திருடன் மணியன்பிள்ளை" எனும் நூலிற்காக மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற சா. முகம்மது யூசுப் (குளச்சல் யூசப்) அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சென்னை, பெசன்ட்நகர் சோழிங்கநல்லூர் (1500 எம்.எஸ்.பி) கோட்டம்/பிரிவு - 1, இரண்டாவது தளம், அடுக்குமாடி குடியிருப்பில் எண். 6/10 குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "நிலம் பூத்து மலர்ந்த நாள்" எனும் நூலிற்காக மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்ற திருமதி கே.வி. ஜெயஸ்ரீ அவர்களுக்கு ஜெ.ஜெ. நகர் கோட்டம், 92எச்.ஐ.ஜி. அம்பத்தூர் கட்டடத்தின் எச்.4/90 என்ற அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட "கருங்குன்றம்" எனும் நூலிற்காக மொழிபெயர்ப்பாளருக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றகண்ணையன் தட்சணாமூர்த்தி அவர்களுக்கு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத் திட்டப் பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் '4ஏ' குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் 10 மொழிபெயர்ப்பாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வழங்கினார்.

**இந்திய அரசியலமைப்பின் சிற்பி அண்ணல் அம்பேத்கரின் ஆக்கங்களை எளிய தமிழில் மொழிபெயர்த்து மக்கள் பதிப்பாக முதல் 10 தொகுதிகளை வெளியிடுதல்**

அண்ணல் அம்பேத்கரின் கருத்துகளை உலகம் முழுவதும் பரப்பிடும் வகையில் அவரது அனைத்து படைப்புகளையும் இன்றைய தமிழ் இளைஞர்கள் எளிமையாக வாசிக்கும் வகையில் புலவர் செந்தலை ந. கவுதமன், பேராசிரியர் வீ. அரசு, பேராசிரியர் முனைவர் மு. வளர்மதி, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மேனாள் துணை இயக்குநர்

திரு. அ. மதிவாணன் ஆகியோரின் நெறியாளுகையில் பிறமொழி கலப்பின்றி மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ் வளர்ச்சித் துறை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்துடன் இணைந்து மக்கள் பதிப்பாக (1) இந்தியாவில் சாதிகள், (2) சூத்திரர்கள் யார்? பகுதி 1, (3) சூத்திரர்கள் யார்? பகுதி 2, (4) தீண்டப்படாதோர் - அவர்கள் யார்? அவர்கள் ஏன் தீண்டப்படாதோர் ஆயினர்?, (5) தீண்டப்படாதோர் அல்லது இந்தியச் சேரிகளின் குழந்தைகள், (6) தீண்டப்படாதோர் - தீண்டாமை/ சமூகம், மதம் பற்றிய கட்டுரைகள், (7) தீண்டப்படாதோர் - தீண்டாமை : அரசியல் கட்டுரைகள், (8) இந்து மதத்தின் தத்துவம் இந்தியா - பொதுவுடைமைக்கான முன் தேவைகள், (9) பண்டைய இந்தியா: புரட்சி எதிர்ப் புரட்சி பகுதி 1/பௌத்தத்தின் வீழ்ச்சி - சாதிகளின் தோற்றம் (10) பண்டைய இந்தியா: புரட்சி எதிர்ப்புரட்சி பகுதி 2 / இந்து மதத்தின் ஆதாரப் பகுதி சாதிதான், ஆகிய 10 தலைப்புகளில் ஒவ்வொரு தொகுதியும் ஏறக்குறைய 300 பக்கங்கள் அளவில் நூலாக்கம் செய்யப்பட்டுள்ளன.

மக்கள் பதிப்பான இந்த பத்து தொகுதிகளை முதலமைச்சர் அவர்கள் நேற்று வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், புலவர் செந்தலை ந. கவுதமன், பேராசிரியர் வீ. அரசு, பேராசிரியர் முனைவர் மு. வளர்மதி, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மேனாள் துணை இயக்குநர் அ. மதிவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் அண்ணல் அம்பேத்கரின் ஆக்கங்களை எளிய தமிழில் மொழிபெயர்த்து மக்கள் பதிப்பாக முதல் 10 தொகுதிகளை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், புலவர் செந்தலை ந. கவுதமன், பேராசிரியர் வீ.அரசு, பேராசிரியர் முனைவர் மு.வளர்மதி, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மேனாள் துணை இயக்குநர் அ.மதிவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொங்கல் திருநாளையொட்டி

# தமிழக காவல்துறையினர் 3186 பேருக்கு பதக்கங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணை!

**சென்னை, ஜன. 14-**

**2025 பொங்கல் திருநாளையொட்டி 3186 தமிழக காவல் துறை மற்றும் சீருடை அலுவலர்கள்/பணியாளர்களுக்கு பொங்கல் பதக்கங்கள் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டில் காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகிய துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தமது பணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற செயல்பாட்டினை அங்கீகரித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில் (ஆண்/பெண்) காவலர் நிலை2, காவலர் நிலை1, தலைமைக் காவலர் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைகளில் 3000 பணியாளர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கங்கள்" வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மேலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் முன்னணி தீயணைப்போர், இயந்திர கம்மியர் ஓட்டி, தீயணைப்போர் ஓட்டி (தரம் உயர்த்தப்பட்ட இயந்திர கம்மியர் ஓட்டி) மற்றும் தீயணைப்போர் (தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர்) ஆகிய நிலைகளில் 120 அலுவலர்களுக்கும். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் முதல் நிலை வார்டர்கள் (ஆண்), இரண்டாம் நிலை வார்டர்கள் (ஆண்) மற்றும் இரண்டாம் நிலை வார்டர்கள் (பெண்) நிலைகளில் 60 பேர்களுக்கும் "தமிழக முதலமைச்சரின் சிறப்பு பணிப்பதக்கங்கள்" வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மேற்படி பதக்கங்கள் பெறுபவர்களுக்கு நிலைவேறுபாடின்றி மாதாந்திர பதக்கப்படி ரூ.400/, 2025 பிப்ரவரி 1ம் தேதி முதல் வழங்கப்படும்.

மேலும், காவல் வானொலி பிரிவு, மோப்ப நாய் படைப் பிரிவு மற்றும் காவல் புகைப்படக் கலைஞர்கள் பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் என ஒவ்வொரு பிரிவிலும் 2 நபர்கள் வீதம், மொத்தம் 6 அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் தொழில்நுட்ப சிறப்புப் பணிப் பதக்கம்" வழங்க முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இப்பதக்கங்கள் பெறும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு அவரவர்களின் நிலைகளுக்குத் தக்கவாறு ரொக்க தொகை வழங்கப்படும்.

மேற்கண்ட அனைவருக்கும் பின்னர் நடைபெறும் சிறப்பு பதக்க அணிவகுப்பு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய பதக்கச்சுருள் வழங்கப்படும்.

மேற்கண்டவாறு உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## விடுமுறை அறிவிப்பு!

தை முதல் நாள் தமிழர் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் திருநாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்துக்கு 14.01.2025 - செவ்வாய்க்கிழமை மற்றும் 15.01.2025 - புதன் ஆகிய இரு நாட்கள் விடுமுறை.

எனவே முரசொலியின் அடுத்த இதழ் 17.01.2025 வெள்ளி அன்று வழக்கம் போல் வெளிவரும்.

**- தலைமை நிர்வாகி**
**முரசொலி**



வருகிற ஜனவரி 22ம்தேதி தமிழ்நாடு முதலமைச்சர் சிவகங்கையில் நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை புரிவதை முன்னிட்டு சிவகங்கை மன்னர் அரசு கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் பந்தல் பணியினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பார்வையிட்டு ஆலோசனை நடத்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், பந்தல் சிவா ஆகியோர் உள்ளனர்.